www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 45 SEPTEMBER 2014

இதழ் - 45 புரட்டாதி 2014

# ஜனாதிபதித் தேர்தலும் ஆளும் – எதிர் கட்சிகளின் கொள்கை நிலைப்பாடும்



நாட்டில் அடுத்த ஆண்டு (2015) முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறலாம் என்ற செய்திகள் வெளிவந்துள்ள சூழலில், பிரதான அரசியல் கட்சிகள் அதற்கான ஆயத்த வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாமா என்ற வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்ற போதிலும், ஐக்கிய மக்கள் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக அவரே போட்டியிடுவார் என தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிடுவார் என அக்கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர். தங்களது முடிவை ஏனைய எதிர்க்கட்சிகள் ஏற்று தமக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

ஐ.தே.கவின் முடிவை ஜே.வி.பி ஏற்கவில்லை என அக்கட்சி திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. அவ்வாறு ஐ.தே.கவின் வேட்பாளரை ஜே.வி.பி ஆதரிக்குமாயின், அது ஜே.வி.பியின் அரசியல் தற்கொலையாக முடிந்துவிடும் என அக்கட்சிக்குத் தெரியும்.

ஜனநாயக கட்சியின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவும் ஐ.தே.க வேட்பாளரை பொது வேட்பாளராக ஏற்க முடியாது என அறிவித்துள்ளார்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிக்கும் என்பது அறிவிக்கப்படாத போதும், அவர்கள் யாரை எதிர்த்து அல்லும் பகலும் அரசியல் நடாத்தி வருகின்றார்கள் என்பதை வைத்தும், கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர்கள் யாரை ஆதரித்தார்கள் என்பதை வைத்தும், அவர்கள் முடிவு என்னவாக இருக்கும் என்பதை ஊகிப்பது ஒன்றும் கடினமான விடயம் அல்ல. அவர்களது நிலைப்பாடு வழமை போல தங்கள் தலையில்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

**நூறு சிந்தனை மலரட்டும்**

படிப்பகம்

# இவர்கள் இப்படியாக பேசுவது இது முதலுமல்ல, கடைசியுமல்ல!

ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தனியான நாட்டை அமைப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமல்ல என்று தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா இலங்கை உயர் நீதிமன்றத்தில் 22.09.2014 இல் சத்தியக்கடதாசி ஒன்றினை சமர்ப்பித்துள்ளார். வட்டுக்கோட்டையில், இற்றைக்கு 38 ஆண்டுகளுக்கு முன்னதாக, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில், வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மக்களுக்கு 'தமிழ் ஈழம்' என்ற தனியான அரசு உருவாக்கப்பட வேண்டுமென்று பிரகடனப்படுத்தப்பட்டது. அத்துடன், அந்த மாநாட்டில் 'தமிழ் ஈழ' அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும் படியும் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கப்பட்டது. அன்றைய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியில் முக்கிய இளைய தலைவராக அந்த மாநாட்டில் அங்கம் வகித்த மாவை சேனாதிராசா, இன்றைய தமிழரசுக்கட்சியின் தலைவராக, பிரிவினைக்கு எதிரானவராக, சத்தியக்கடதாசி வாயிலாக தெரிவித்துள்ளார்.

06.09.2014 இல் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசா தெரிவானார். இந்த சத்தியக்கடதாசியினை இலங்கை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நான்கு நாட்கள் முன்னதாக, தமிழரசுக்கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டமையை பாராட்டி காங்கேசன்துறை தமிழரசுக்கட்சி கிளையினால் வழங்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றிய மாவை சேனாதிராசா "இன்று எமக்கு போடப்படும் மாலைகளும் பொன்னாடைகளும் எம்மை மேலும் போராடவேண்டும் என்றே தூண்டுகின்றன. போருக்கு செல்வதற்கான தூண்டுதலாகவே அவை அமைக்கின்றன. போருக்கு செல்வதற்கான ஆடை அணிகளாகவே நான் அவற்றைப் பார்க்கின்றேன்" என்று கூறியுள்ளார். மேலும் பேசிய அவர் "எமக்கு கிடைக்கப்போகும் தமிழீழம் எங்கு கிடைக்க வேண்டும் என்றால் எமது மண்ணில் தான் கிடைக்க வேண்டும். இதனை விடுத்து நாம் மொழியை இழந்து மண்ணை இழந்து வேறு எங்கும் பெற முடியாது" எனவும் கர்ச்சித்துள்ளார்.

கொழும்பில் ஒன்றை சொல்வதும் வடக்கு கிழக்கில் வேறொன்றை சொல்வதும் என்பது, (தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சியிலிருந்து இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரை) பாராளுமன்ற தமிழ் தலைவர்கள் காலங்காலமாக கடைப்பிடித்து வரும் கேவலமான ஒரு நடைமுறை. 2009 இல் புலிகள் அனைவரும் வழித்துத்துடைத்து அழிக்கப்படும்வரை புலிகளுடன் கூடிக்குலாவிட்டு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களில் சிலர் தாங்கள் ஒருபோதுமே ஆயதப்போராட்டத்தினை ஆதரிக்கவில்லையெனக் கூறி, அகிம்சை வழியில் தமிழர்களின் உரிமைகளை பெற்றுத் தரப்போவதாக ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசுவார்கள். அத்தோடு நின்றுவிடாது, ஆயதப்போராட்ட குழுக்களிலிருந்து வந்தவர்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஓரங்கட்ட வேண்டுமென்றும் பகிரங்கமாக கூறுவார்கள். பின்னர் வன்னியை 'வீரமண்' என்றும் புலிகளை 'வீரர்கள்' என்றும் புகழ் பாடுவார்கள். இது வாக்கு பொறுக்கி அரசியலென நீண்ட காலமாக சொல்லப்பட்டு வருகின்றது.

நான்கு நாட்கள் இடைவெளியில் போர், தமிழீழம் என்றும் பின்னர் பிரிவினைக்கு எதிராக நீதிமன்றில் சத்தியக்கடதாசி முடிக்கும் தகிடுதத்தித்தனங்களை பொதுவாகவே பாராளுமன்ற தமிழ் தலைவர்கள் 'அவசியமாக' கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையென தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ள பழகிவிட்டார்கள். அதாவது சட்டப்பிரச்சனையென்று வரும்போது எதையாவதை சொல்லித் தப்பிப்பதில் தவறேதுமில்லை என்ற மனோபாவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகத்தான் தாங்கள் வாக்குப்போட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தெற்கில் என்ன பேசுகிறார்கள், வடக்கு கிழக்கில் என்ன பேசுகிறார்கள் என்பதனை தமிழ் மக்கள் சீரெடுத்து பார்ப்பதில்லை.

உண்மையில் 'தமிழீழம்' என்பது ஒரு சாத்தியமற்ற கோரிக்கை என்பது எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தில் இருந்து மாவை சேனாதிராசா வரைக்கும் நன்கு தெரிந்த விடயம். ஆனால் அந்த கோரிக்கை வைக்கும்போது, எவ்வளவு போலியாக அந்த இலக்கை இலகுவாக அடையலாமென தமிழ் இளைஞர்களை தூண்டிவிட்டு நாடகம் ஆடினார்களோ, அதே வீச்சில் சற்றும் குறையாமல் அண்மைக்காலமாக மீண்டும் நாடகம் ஆடத் தொடங்கி இருக்கிறார்கள். தமிழீழ மாயையில் தூண்டப்பட்டு கால் நூற்றாண்டுக்கு மேல் நீடித்த யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டு ஐந்து வருடங்களே ஆகியிருக்கின்றன. இந்த இழப்புகளின் பின்னராவது தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த சூத்திரதாரிகளுக்கு ஒரு குற்ற உணர்வு வந்திருக்க வேண்டும். நீதிமன்றில் சத்தியக்கடதாசி தாக்கல் செய்ய முன்னர், வட்டுக்கோட்டையில் தமிழ் ஈழம் பிரகடனப்படுத்தப்பட்டதற்கு தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக்கோரி, அந்த பிரகடனத்தை எப்போதோ வாபஸ் பெற்றிருக்க வேண்டும். *

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com


படிப்பகம்

www.padippakam.com

### தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் 37ஆவது ஆண்டு நினைவாக

# கம்யூனிஸ இயக்கத்தில் கார்த்திகேசனின் அழிக்க முடியாத பங்களிப்பு

*- கனடா வாழ் கம்யூனிஸ்ட் அபிமானிகள்*

தோழர் மு.கார்த்திகேசனின் வாழ்க்கை யாவரும் கற்க வேண்டிய ஒரு கம்யூனிஸ்ட்டின் வரலாறாகிவிட்டது. அவர் பயின்ற கல்வியினூடாகப் பெற்ற சமூகநெறிக் கொள்கை, மக்கள் பயன்கருதி அக் கொள்கைகளுக்காக அவர் ஆற்றிய தீர்க்கமான வீரச் செயல்கள் யாவும் அவர் ஒரு 'மக்கள் நேசன்' என்பதையே காட்டுகின்றன. தோழர் கார்த்திகேசனை ஆழமாக அறிந்த புலவர் ம.பார்வதிநாதசிவம் அவர்கள்:

'ஆங்கிலத்தில் பேரறிஞன்

அருந்தமிழில் வல்லோன்

அன்பார்ந்த நெஞ்சுடையோன்

தீங்கறியா நல்லுள்ளத்தோன்

திகழ் பொதுமைக் கொள்கை

தெளிந்துணர்ந்தே தெளிந்தபடி

வாழ்ந்திட்ட மேலோன்'

என்று அவர்களைப் பற்றிப் பாடியிருப்பது சாலவும் பொருந்தும்.

இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சியை மார்க்ஸிச - லெனினிஸ - மாவோ சிந்தனையின் அடிப்படையில் அமைத்து, தெளிவான அரசியல் நோக்கோடு, அடக்கி ஒடுக்கப்பட்ட பாட்டாளிகள், தொழிலாளர், விவசாய மக்களுக்காகப் போராட்டங்களை நடத்தி இறக்கும் வரை தன் வாழ்க்கையை மக்களுக்காக முழுமையாக அர்ப்பணித்தவர் தோழர் கார்த்திகேசன். இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளில் பொதுவுடைமைக் கொள்கைகளை மக்களுக்கு விளக்கி அரசின் சுரண்டல் தனத்தையும், ஊழல்களையும், முதலாளி வர்க்க ஆதிக்கத்தையும் அம்பலப்படுத்தி மக்களைப் பொதுவுடைமை நெறியில்



**தோழர் கார்த்திகேசன்**

வழிப்படுத்திய தோழர் சிங்காரவேலர் போன்று, யாழ்ப்பாணத்து மக்களுக்கும் ஒரு புரட்சிகர மாற்றத்தைக் காட்டியவர் தோழர் கார்த்திகேசன்.

## புரட்சிகர சிந்தனைக்கு வித்திட்ட இளமைக் காலம்

மதச்சார்பின்மை, இனபேதமற்ற இலங்கைத் தேசியவாதம், பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை, ஆகிய உயரிய நோக்கங்களுக்காக 1926ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் செயற்படத் தொடங்கிய இலங்கை இளைஞர் (மாணவர்) காங்கிரஸ், இலங்கையின் அரசியல் பரப்பில் புதிய திருப்பத்தை உண்டாக்கியது. இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தால் ஆகர்சிக்கப்பட்ட தேசிய இளைஞர் காங்கிரஸ், 1927ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் வருகையாலும், பின்னர் 1932ஆம் ஆண்டு ஜவகர்லால் நேருவின் யாழ்ப்பாண வருகையாலும் உத்வேகம் அடைந்தது. தென்னிலங்கையிலிருந்து வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, இளைஞர் காங்கிரஸில் முதன்முதலாக சமஸ்டி ஆட்சி பற்றிய கருத்துக்களை முன்வைத்தார். இலங்கை இளைஞர் காங்கிரஸ் 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பை எதிர்த்து சக்திமிக்க பகிஸ்கரிப்புப் போராட்டங்களை தமிழ்ப் பிரதேசங்களில் நடாத்தியது. இலங்கை இளைஞர் காங்கிரஸின் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் இளம் கார்த்திகேசனின் உள்ளத்தில் புரட்சிகர அரசியல் மாற்றத்திற்கான தேடலுக்கு வித்திட்டது.

தோழர் கார்த்திகேசன் லண்டன் சீனியர் கேம்பிறிஜ் பரீட்சையில் மிகச் சிறப்புச் சித்தி பெற்று, மலாயா (தற்போதைய மலேசியா) முழுவதிலும் மூன்றாவது நிலையைப் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகம் சென்றார். ஆங்கிலம், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களிலும் முதலாண்டு பரீட்சையில் முன்னிலைப் புள்ளிகளைப் பெற்றார். இந்நிலையில் சிறப்புப் பாடமாக ஆங்கிலத்தையா அல்லது கணிதத்தையா தொடர்வது என்பது இவருக்குப் பெரும் வினாவாகிவிட்டது. ஆங்கிலப் பேராசிரியர் திரு.லுடாவைக்கின் மாணவனாகத் தீர்மானித்து, தனது கல்வியை மேற்கொண்டார். ஆங்கிலம், வரலாறு, அரசியல் முதலிய துறைகளில் பல நூல்களைக் கற்று, சிறுவயதில் இவருக்கு இருந்த அறிவூக்கத்தையும், ஆய்வூக்கத்தையும் மேலும் மேலும் துளிர வைத்தார்.

பல்கலைக்கழக மாணவனாக இருந்த போதே, தான் கற்றவற்றை விமர்சனப் பாங்காக ஆராயத் தொடங்கினார். வர்க்கக் கண்ணோட்டத்தில் அரசியல் - இலக்கிய நூல்களை விமர்சித்தார். சாதாரண மாணவர் போக்கிலும்


படிப்பகம்

www.padippakam.com

பார்த்தார். முற்றிலும் வித்தியாசமான கண்ணோட்டமும், கணிப்பும், இவரிடம் கருத்தரிக்கத் தொடங்கிவிட்டன.

தோழர் மு.கார்த்திகேசன் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில், லண்டனில் கல்வி கற்றுப் பொதுவுடைமைவாதிகளாகத் திரும்பி வந்த டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், அ.வைத்திலிங்கம், பொன்.கந்தையா ஆகியோர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய கம்யூனிஸ பிரச்சார உரைகளும் கார்த்திகேசனைக் கவர்ந்தன. கம்யூனிஸக் கோட்பாடுகளால் கவரப்பட்டு பல்கலைக்கழகப் பத்திரிகையான 'ஸ்ருடன்ற் நியூஸ்' (Student News) பதிப்பாசிரியராகப் பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். தனது கருத்தை மற்றவர்க்கு எளிதாக விளங்க, தெளிவாகப் பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லவரான கார்த்தி, ஆங்கில சிறப்புப் பட்டதாரிப் பட்டத்துடன் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறினார்.

தோழர் கார்த்தி இலங்கை அரசியலில் ஆற்றிய பங்கு மிகப் பெரியதாகும். இலங்கையில் 1935ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி இரண்டாவது உலக மகாயுத்தம் தொடர்பாக ட்ரொஸ்கியவாத கருத்துக்களை முன்வைத்து பாசிஸவாத ஹிட்லரை ஆதரித்தது. தொழிலாள வர்க்கத்தை மார்க்ஸிச - லெனினிஸ மார்க்கத்தை நோக்கி வழி நடாத்தவும், சோசலிஸ அமைப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சோவியத் யூனியனுக்கு விரோதமாக இருந்த போக்கிற்கு எதிராகவும் அணி திரண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943ஆம் ஆண்டு யூலை மாதம் 03ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, எம்.ஜீ.மெண்டிஸ், பீற்றர் கெனமன், ஆரியவன்ஸ குணசேகர, அ.வைத்திலிங்கம், பொன்.கந்தையா, கே.ராமநாதன், எம்.ஏ.காதர், ஏ.மகாலிங்கம், என்.சண்முகதாசன் ஆகியோருடன் எம்.கார்த்திகேசன் அவர்களும் இக்கட்சியின் ஸ்தாபக அங்கத்தவராக இருந்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார இதழான 'போர்வேட்' (Forward) பத்திரிகையின் பதிப்பாசிரியராக தோழர் கார்த்திகேசன் தொழிற்பட்டார். ஆங்கிலேய காலனித்துவ அரசுக்கும், ட்ரொஸ்கிய கருத்துக்களுக்கும் எதிராக இப்பத்திரிகை குரல் கொடுத்தது.

இவர் கொழும்பு கொட்டா வீதியில் வாழ்ந்த காலத்தில் தென்னிலங்கையிலுள்ள அரச மற்றும் வங்கி ஊழியர்கள், தொழிலாளர்கள் மத்தியில் ஆற்றிய சொற்பொழிவுகள் விவாதங்கள், மக்கள் மத்தியில் கம்யூனிஸ கருத்துக்களை எடுத்துச் செல்லப் பெரிதும் உதவின. அரச ஊழியர்கள், குறிப்பாக லிகிதர் சேவை, வணிக சேவை, ரெயில்வே சேவை முதலியவற்றில் கடமையாற்றிய ஊழியர்களை ஒன்றிணைத்து தொழிற்சங்கங்கள் அமைக்க இவர் பெரிதும் பாடுபட்டார். இலங்கையில் தொழிற்சங்கங்கள் வலுப்பெறவும், வளரவும் இவர் பெருமளவில் உதவினார்.

## யாழ்ப்பாணக் கம்யூனிஸ்ட்டுகளின் முன்னோடி

கொழும்பில் சில வருடங்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்காக உழைத்த பின்னர் யாழ்ப்பாணத்தில் 1946ஆம் ஆண்டு வட பிரதேச கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையை ஆரம்பித்தார். 'சங்கமித்தா' நாட்டிய அரச மரக்கிளை இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்திலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பல மாற்றங்களை ஏற்படுத்தியது. தோழர் கார்த்தி யாழ்.நகரில் உள்ள விக்ரோறியா வீதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் ஒரு பாதியை கட்சிக் காரியாலயமாகவும், மறுபாதியை தனது வதிவிடமாகவும் கொண்டு அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டார். இவருடன் ஸ்தாபக அங்கத்தவர்களாக காலம் சென்ற தோழர்களான டாக்டர் சு.வே.சீனிவாசகம், வீ.ஏ.கந்தசாமி, எம்.சி.சுப்பிரமணியம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், எம்.ஏ.காதர், எஸ்.கே.கந்தையா, கே.மகாலிங்கம், இராமசாமி ஐயர், இராசையா ஆகியோர் இணைந்து கொண்டனர். பிற்காலத்தில் காலம் சென்ற கவிஞர் பசுபதி, சுபைர் இளங்கீரன், ஜனகா மற்றும் வேறு பலரும் இக்கட்சியில் இணைந்து முன்னணியில் செயற்பட்டனர்.

சமயப் பற்றும், தீண்டாமையும், சாதி அடக்குமுறையும், நிலப்பிரபுத்துவ சிந்தனைகளும், இறுகிய சமூகக் கட்டுப்பாடுகளுமுடைய யாழ்.குடாநாட்டில் பொதுவுடைமைக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது ஆபத்தானதும், சிரமமானதுமான செயல்களாகும். கிராமங்களில் உடையார் மணியகாரர்களின் கைகளில் பொல்லும் அதிகாரமும் இருந்த காலத்தில் சமுதாய மாற்றத்துக்கான ஒரு புரட்சிகர இயக்கத்தைக் கட்டி வளர்ப்பது மிகவும் துணிச்சலான காரியமாகும்.

தான் விரும்பிய பெண்ணை மிகவும் எளிமையான முறையில் உறவினர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் மணமுடித்த காாத்திகேசன், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் 'கம்யூன்' வாழ்க்கை நடத்தினார். கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக வேலை செய்த கார்த்திக்கு கிடைத்த மிகக் குறைந்த வருவாயுடன் புதுமண வாழ்க்கையையும், கட்சியையும் கட்டி வளர்த்தார்.

பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று நீதிமன்ற நீதவானாக வர வேண்டும் என்றே இவரது பெற்றோர் எதிர்பார்த்தனர். இவர் நல்லதோர் அரச பதவியையும், செல்வந்தக் குடும்பத்தில் ஒரு பெண்ணையும் அடைந்து சுகபோக வாழ்வு வாழ்ந்திருக்கலாம். இவற்றையெல்லாம் ஒருபுறம் தள்ளிவிட்டு எளிமையாகவும், மக்களுக்காகவும் வாழ்ந்தார்.

## இடதுசாரிகள் தேர்தல் பரப்பில்

இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகளில் இடதுசாரிக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவு பெற்று பலம் பொருந்திய சக்தியாகப் பரிணமித்தன. 1947ஆம் ஆண்டுப்


படிப்பகம்

www.padippakam.com

பொதுத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் 95 பாராளுமன்ற ஆசனங்களில் 20ஐக் கைப்பற்றின. ஐக்கிய தேசியக் கட்சி (யு.என்.பி) இப் பொதுத் தேர்தலில் 41 ஆசனங்கள் மட்டுமே பெற்று சிறுபான்மையாக இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இடதுசாரிகள் நாடாளுமன்றம் பற்றி தெளிவற்ற முரணான கருத்துக்களாலும், தங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளை பொதுத் தேர்தலின் போது பெருமளவு மிகைப்படுத்தியதாலும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாமல் போய்விட்டது. இதை நன்குணர்ந்த ஐ.தே.க தலைமையிலான பூர்சுவா வர்க்கம் மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமைகளைப் பறித்ததின் மூலம், இடதுசாரி இயக்கங்கள் இனிவரும் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதைத் தடுத்துவிட்டனர்.

இதேவேளை கம்யூனிஸ்ட் கட்சி ஊடாக வடக்கில் தோழர்கள் மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், பொன்.கந்தையா, எம்.சி.சுப்பிரமணியம் போன்றோர் தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளுக்கெதிராக தேர்தல் களத்தில் குதித்தனர். இத்தசாப்தங்களில் அரசியல் செல்வாக்கு கறுப்பு கோட் அணிந்த நியாயவாதிகளான அட்வகேட், புறக்ரர் போன்றோரினினதும், எம்.ஏ, பீ.ஏ. பட்டங்கள் பெற்றவர்களினதும் கைகளில்தான் இருந்தது. இவர்களின் குலம் பார்த்து, கோத்திரம் அறிந்து, ஆளணி சேர்த்து வாக்குகள் வாங்கிக் கொடுக்க பழமை பேணும் மணியகாரன், உடையார், விதானை போன்றவர்கள் எல்லா கிராமங்களிலும் இருந்தனர். இவர்களை எதிர்த்து மக்கள் பேசினால் அல்லது வாக்களித்தால், அவர்களுக்கு நேரும் ஆபத்துகள் பல. இம் மேலாதிக்கக்காரருடன் ஒத்துப் போகாத ஏழை எளியவர்களின் வீடு வாசல்கள் தீக்கிரையாகின. செய் பயிர்கள் பிடுங்கி வீசப்பட்டன. வழி மறித்துத் தாக்கப்பட்டனர். உயர்சாதியில் பிறந்து, ஆங்கிலம் கற்று அரச பதவி வகித்து 'வெள்ளைக்காரன்' போல காலனித்துவ மோகத்தோடு வாழ்ந்தவர்கள் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகளை ஆதரித்தனர். (முற்போக்கான சிந்தனையுள்ள சிலரும் இவ்வர்க்கங்களில் இருந்தனர்) இவ்வாறான பிற்போக்கு சக்திகளை தோழர் கார்த்திகேசன் பொது மேடைகளிலும், பகிரங்கக் கூட்டங்களிலும் எதிர்த்து தனது அறிவாற்றலாலும், சொல் வன்மையாலும் அம்பலப்படுத்தினார். எனினும் பாராளுமன்றத் தேர்தல்களில் இடதுசாரி அணிகள் ஐக்கியப்படத் தவறியதால், பாராளுமன்றத்திற்கு கார்த்திகேசன் செல்லும் வாய்ப்பை இழக்க நேரிட்டது.

ஆனாலும் அவரது மக்கள் நேசத்தாலும், மக்கள் அவருக்கு அளித்த ஆதரவாலும், தோழர் கார்த்திகேசன் 1950களில் யாழ்.மாநகரசபைக்கு வண்ணார்பண்ணை வட்டார மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இக்காலகட்டத்தில் யாழ்.பொது நூலகம் கட்டுவதற்கு பொருத்தமான இட ஒதுக்கீடு பற்றிய விவாதம் சபையில் இடம் பெற்றது. யாழ்.முற்றவெளியில் முனியப்பர் கோவிலுக்கு அருகாமையில் இருந்த இடம் ஒன்று பிரேரிக்கப்பட்டது. அவ்வேளை கந்தர்மடம் வட்டார உறுப்பினராக இருந்த முதலியார் முத்துத்தம்பி அவர்கள், அந்த இடத்தில் நூலகம் கட்டப்பட்டால், அது முனியப்பர் கோவிலுக்கு குந்தகம் விளைவிக்கும் எனக்கூறி அப்பிரேரணையை எதிர்த்தார். அப்பொழுது தோழர் கார்த்திகேசன், "கோவிலுக்கு முன்னால் குடித்துக் கும்மாளம் அடிக்க ஒரு 'கிளப்'பை அனுமதிக்கலாம் என்றால், ஒரு நிஜக் கோவிலுக்கு முன்னால் ஒரு கலைக் கோவில் நிறுவுவதில் என்ன தவறு இருக்க முடியும்?" என்று வினவி வாதிட்டார். அதன்பின்னர் சபை ஏகமனதாக முனியப்பர் கோவிலுக்கு முன்னால் அமைந்த இடத்தில் யாழ்.பொது நூலகம் நிறுவுவதை ஏற்றுக் கொண்டது. யாழ்ப்பாணச் சரித்திரத்தில் சகல தமிழ் பேசும் மக்களும் ஒன்று என்ற வகையில் யாழ்.மாநகர சபையில் முஸ்லீம் மக்களின் ஒரு பிரதிநிதியான ஜனாப் எம்.எம்.சுல்தான் அவர்களைப் பிரேரித்து தனது விவாதத் திறமையால் வாதிட்டு பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவரை மாநகர முதல்வராக்கிய பெருமை கார்த்திகேசனுக்கே உரியது.

## தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்

இலங்கையிலுள்ள தமிழர் மத்தியில் மிக நீண்ட காலமாக இறுகியிருந்த சாதி அமைப்பு முறை காரணமாக தாழ்த்தப்பட்ட மக்கள் (பஞ்சமர்) அடக்கி ஒடுக்கப்பட்டு தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டனர். வடபுலத்திலேயே இந்த அடக்குமுறை மிகக் கொடுமையாக இருந்தது. இந்நிலை "அமெரிக்காவில் கறுப்பு நிறத்தவருக்கு எதிரான வெள்ளையரின் நிறத் துவேசத்தையும் விட, கொடுமையான அடக்குமுறை யாழ்ப்பாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கு எதிராக உள்ளது" என்று பேக்லி (Berkley) பல்கலைக்கழக பேராசிரியர் காட் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

60களின் நடுப்பகுதியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) இவ்வொடுக்குமுறையை எதிர்த்துப் போராட முடிவெடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமையை எதிர்த்துப் போராடுவதால் உயர்குல மக்களின் ஆதரவை இழக்க நேரிடும் என சிலர் வாதிட்டனர். இச்சூழ்நிலையில் மு.கார்த்திகேசன், வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், கே.டானியல், சு.வே.சீனிவாசகம் போன்றோர் சாதி அமைப்புக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக ஒன்று திரண்டு குரல் கொடுத்தனர். கட்சியின் வழிகாட்டலில் அவர்கள் மக்கள் அணியைக் கட்டுவதில் முழுவீச்சுடன் ஈடுபட்டனர்.

1966 அக்டோபர் 21ஆம் திகதி "சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற கோசத்துடன் கம்யூனிஸ்ட் கட்சி சுன்னாகத்திலிருந்து ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்த முற்பட்ட போது பொலிஸ் தடுத்து நிறுத்தி தாக்கியதுடன், தோழர்கள் வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம்,


படிப்பகம்

www.padippakam.com

இ.கா.சூடாமணி ஆகியோரைக் கைது செய்து தடுத்து வைத்தனர். கொதித்தெழுந்த முற்போக்கான தமிழ் மக்கள் ஒன்று திரண்டு இவ்வூர்வலத்தை யாழ் நகர் வரை நடாத்தி, யாழ்.முற்றவெளியில் பொதுக்கூட்டம் ஒன்றையும் வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர். மேற்குறித்த மேடையில் என்.சண்முகதாசனும் பேசினார். 1966 – 1970 காலகட்டத்தில் நடந்த ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்கு கம்யூனிஸ்ட் கட்சியால் உருவாக்கப்பட்ட எஸ்.ரி.என். நாகரத்தினம் தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மக்களை அணிதிரட்டுவதிலும், போராட்டங்களை நெறிப்படுத்துவதிலும் பலம் பொருந்திய சக்தியாக விளங்கியது.

இப்போராட்டத்தில் உயர்சாதி வெறியர் ஈவிரக்கமின்றி ஒடுக்கப்பட்ட மக்களை ஆயுத பலத்தால் அடக்க முற்பட்டனர். இதில் ஒருசிலர் உயிர் பலியாகினர். இவ்வன்முறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடாத்த வேண்டும் என்று இளைஞர்கள் கிளர்ந்தெழுந்தனர். அதனால் உயர்சாதி வெறியர்கள் சிலரும் பலியாக நேரிட்டது.

## இலங்கையில் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு எதிரான ஒடுக்குமுறை பௌத்த மேலாதிக்கமும் கிறிஸ்தவர்களும்

1883ஆம் ஆண்டு ஆரம்பித்த கிறிஸ்தவர்களுக்கு எதிரான பௌத்த மேலாதிக்க சிங்களவரது முறுகல் நிலையானது கொழும்பு நகரின் தெருக்களில் பல வன்முறை மோதல்களுக்கு வழிவகுத்தது. கொட்டாஞ்சேனையில் 1883ஆம் ஆண்டு ஏப்ரல் மாதக் கலவரத்தில் 12 பொலிசார் உட்பட 30 பொதுமக்கள் காயமுற்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டு – வெளிநாட்டு வர்த்தகத்தில் ஆதிக்கத்திலிருந்த முஸ்லீம்கள், பிரித்தானியர், போராஸ், சிந்திகள், பார்சிகள், செட்டிகள் போன்றோரின் சந்தையை கைப்பற்றுவதற்கான சிங்கள பூர்சுவா வர்க்கத்தின் போட்டி முஸ்லீம் மக்களுக்கெதிராக திசை திருப்பப்பட்டது. பௌத்த மேலாதிக்கக் கருத்துகளை அனகாரிக தர்மபால (1866 – 1933), நீர்கொழும்பைச் சேர்ந்த வாலிசிங்க ஹரிச்சந்திர (1877 – 1913) போன்றோர் மக்கள் மத்தியில் மிகவும் தீவிரமாகப் பரப்பினர். 1915இல் சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான முதலாவது கலவரம் நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்றது.




## இடதுசாரி இயக்கங்களில் இனவாதம்

1930ஆம் ஆண்டுவரை சிறுபான்மை தேசிய இனங்களுக்கு எதிரான பௌத்த சிங்கள மேலாதிக்க உணர்வுகள் சிங்கள பூர்சுவா, குட்டி பூர்சுவா வர்க்கங்களுக்கிடையில் கொழுந்துவிட்டு எரிந்தது. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும், அவர்களுக்கென முதன்முதலில் ஸ்தாபன வடிவம் கொடுத்து எல்லாத் தொழிற்சங்கங்களையும் ஒருங்கிணைத்து இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றில் அழியாத இடம்பெற்ற ஏ.ஈ.குணசிங்க பௌத்த மேலாதிக்க கருத்துக்களை விதைத்து, தொழிலாள வர்கத்தின் ஐக்கியத்தைப் பிளவுபடுத்த மிகத் தீவிரமாகச் செயற்பட்டார்.

இக்காலகட்டத்தில் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியால் இலங்கையிலும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைந்தன. ஆலைகளில் தொழிலாளர்களாகவும், பூர்சுவாக்களின் வீடுகளில் பணியாட்களாகவும், தேநீர்க்கடை, சிறுவணிகம், ஆசிரியத் தொழில்களில் ஈடுபட்ட மலையாளிகளை 'அந்நியராக' குணசிங்கவின் தொழிற்சங்கங்கள் சித்தரித்தன. ஏ.ஈ.குணசிங்கவின் தொழிற்சங்க ஏடான 'வீரய' மலையாளிகளுக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டது. இதன் விளைவாக குறைந்த வேலைகளில் ஈடுபட்ட மலையாளிகள் கொழும்பில் பல தெருக்களில் அங்குமிங்குமாகத் தாக்கப்பட்டனர். இதன் விளைவாக 1940களில் பெருந்தொகையான மலையாளிகள் இந்தியாவுக்கு நாடு திரும்ப நேரிட்டது.

## மலையக மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறை

இலங்கையில் மிகவும் கொடூரமாக சுரண்டப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளான மலையகத் தோட்டத் தொழிலாளர்களை நாட்டைவிட்டு விரட்டுவதில் முதலாளித்துவ வர்க்கம் முனைப்பாக ஈடுபட்டது. 1960களின் பிற்பகுதியில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்புவாதிகளின் ஐந்தாம் படையாக பௌத்த சிங்களப் பேரினவாதிகளால் சித்தரிக்கப்பட்டனர். 1947ஆம் ஆண்டு தேர்தலில் இடதுசாரிகள் ஈட்டிய வெற்றியைக் கண்டு பயந்த பூர்சுவாக்கள் 1948 – 49ஆம் ஆண்டுகளில் மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கி, அவர்களுக்கு கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதி போன்ற தேவைகளை சட்டரீதியாக இல்லாதொழித்தனர். இக்காரியத்திற்கு தமிழ் தலைவர்களும் (ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்கள்) சிங்கள பூர்சுவா வர்க்கத்திற்கு ஆதரவு கொடுத்து, மலையகத் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தனர். இதேவேளை தோழர் கார்த்திகேசன் தானிணைந்து இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சியினூடாக நடாத்திய வீரமிக்க போராட்டங்களும், கட்சியின் ஏடுகளில் அவர் தீர்க்கதரிசனத்துடன் எழுதிய கட்டுரைகளும், மார்க்சிஸக் கொள்கை


படிப்பகம்

www.padippakam.com

என்றும் நிரந்தரமானது என்பதை துல்லியமாக எடுத்துக் காட்டியது.

### தமிழ் மக்களுக்கு எதிரான இனப் பாகுபாடும் ஒடுக்குமுறையும்

1950ஆம் ஆண்டுவரை இனவாத, மதரீதியான வன்செயல்களுக்குள்ளாகாது இருந்த இலங்கைத் தமிழர், பௌத்த சிங்கள மேலாதிக்கவாதிகளால் 'சிங்களம் மட்டும்' அரசகரும மொழியாக்க எடுத்த முயற்சியால் கொதிப்படைந்தனர். சிங்களம் மட்டும் கோரிக்கை தென்னிலங்கையில் மக்களுக்கிடையே பலத்த ஆதரவு பெற்றது. பிற்போக்கு, இனத்துவேச சக்திகளின் கையோங்குவதை உணர்ந்த கார்த்திகேசன், 'தேசாபிமானி', 'Forward' போன்ற கட்சிப் பத்திரிகைகளினூடாகவும், தினசரி – வார ஏடுகளிலும் தனது கருத்தைக் கூறினார். யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக வேலை செய்தபோது, ஒவ்வொரு வார இறுதி நாட்களையும் கொழும்பில் கட்சியின் ஆங்கில ஏடான Forward ஐ வெளியிடுவதற்கு செலவழித்ததை இன்றும் அவருடன் வேலை செய்த தோழர்கள் நினைவுகூர்வர்.

1954ஆம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் கிளை தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு வல்வெட்டித்துறையில் மாநாடொன்றைக் கூட்டியது. இம்மாநாட்டில் தமிழ் பிரதேசங்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கும் ஐந்தம்சத் தீர்மானத்தை தோழர் கார்த்திகேசன் மற்றும் முன்னணித் தோழர்களுடன் சேர்ந்து முன்வைத்தார். சார்புநிலைப் பொருளாதாரம் போன்ற முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்த கார்த்திகேசன், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தோழர்களால் மகாவலி கங்கை நதியை வட பிரதேசத்திற்குத் திசை திருப்பும் திட்டத்தை ஆதரித்துச் சுயசார்புப் பொருளாதாரத்தை தமிழ்ப் பிரதேசங்களில் கட்டி எழுப்ப வேண்டும் என மக்களிடையே பிரச்சாரம் செய்தார்.

1956ஆம் ஆண்டு 'சிங்களம் மட்டும்' மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பொழுது, கொல்வின் ஆர்.டி.சில்வா, என்.எம்.பெரேரா, லெஸ்லி குணவர்த்தன போன்ற சமசமாஜக் கட்சியினர், இதன் மூலம் இலங்கை இரு நாடுகளாகத் துண்டாடப்படும் (ஒருமொழி இருநாடு, இருமொழி ஒருநாடு) என்ற அபாயத்தைக் கூறி, அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் இலங்கைக்குள் ஊடுருவதற்கு இம்மசோதா வழி செய்யும் எனத் தெரிவித்து மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வாதிட்டனர். ஆனால் 1970ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்த மிகப் பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்த இடதுசாரியான சமசமாஜக் கட்சியின் அதே கொல்வின் ஆர்.டி.சில்வா தயாரித்த அரசியல் சாசனம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முற்படாதது மட்டுமல்ல, பல புதிய அரசியல் சட்டத் திருத்தங்கள் மூலம் தமிழ் மக்களையும், தொழிலாள வர்க்கத்தையும் அடக்கி ஒடுக்க முற்பட்டது.

இதேவேளை தொழிலாள வர்க்கப் புரட்சியுடன் அமையும் சோசலிச அமைப்பில் சகல இன மக்களும் ஐக்கியத்துடன் வாழலாம் என வெறும் வெற்றுக் கோசமிட்ட (இடதுசாரிகளுடன்) தோழர் கார்த்திகேசன் தத்துவார்த்தப் போராட்டம் நடாத்தினார். எழுபதுகளில் கூர்மையடைந்த தமிழ் மக்களின் போராட்டம் வன்முறை வடிவம் பெற்றது. மிகவும் தெளிவாகவும், தூரநோக்குடனும் சிந்தித்த தோழர் கார்த்திகேசன், தமிழ் மக்களின் ஜனநாயக, அரசியல் உரிமைகளை வென்றெடுக்க பரந்துபட்ட வெகுஜன அணியை (இதில் குட்டி பூர்சுவா, தொழிலாள, விவசாய வர்க்கங்கள் அடங்குவர்) இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) யின் தலைமையின் கீழ் கட்டியமைக்க தமிழ் மக்கள் வாழ்ந்த இடமெல்லாம் எழுபதுகளின் நடுக்கூற்றில் சூறாவளிப் பிரச்சாரம் செய்தார். அவருடைய பெருமுயற்சியால் **'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'** என்ற மக்கள் அணி உருவாக்கப்பட்டது.

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் அரசியல் விஞ்ஞாபனம் 1954ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறையில் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முடிவுகளை உள்வாங்கி காலத்திற்கேற்ற பல புதிய திருத்தங்களுடன் வெளிவந்தது. பல புத்திஜீவிகள் கார்த்திகேசனின் கருத்துக்களை பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும், பரந்துபட்ட மக்கள் மத்தியிலும் எடுத்துச் சென்றனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பல வர்க்கங்கள் மத்தியில் உக்கிரமடைந்த பொழுது 1977 செப்ரெம்பரில் நிகழ்ந்த தோழர் கார்த்திகேசனின் மரணம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க..

## 3 இலட்சம் யூத மக்களின் படுகொலைகளுக்கு உதவியாக இருந்த நாஜி குற்றவாளி கைது!

ஜேர்மானிய சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜிப்படைகள் போலந்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில் ஆஸ்விற்ஸ் (Auschwitz) படுகொலை முகாமில் மூன்று இலட்சம் யூதர்களுடைய கொலைகளுக்கு உதவியாக இருந்தார் என 93 வயதுடைய ஒஸ்கார் குறொயினிங் (Oskar Groening) என்பவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இவர் அந்த நேரத்தில் அங்கு நாஜிப்படையான எஸ்.எஸ். (S.S) இன் ஒரு காவலராகப் பணிபுரிந்திருந்தார்.

போலந்து ஜேர்மன் நாஜிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலத்தில் 1944 மே – யூன் மாதங்களுக்கிடையில் சுமார் 425,000 யூதர்கள் ஹங்கேரியிலிருந்து இந்தக் கொலைக்களத்துக்கு இழுத்து வரப்பட்டிருந்தனர். அவர்களில் குழந்தைகள், சிறுவர், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 300,000 (மூன்று இலட்சம்) பேர் உடனடியாகவே விச வாயு அறைகளுக்குள் (Gas Chamber) அடைத்து வைத்துக் கொல்லப்பட்டனர்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒஸ்கார், நாஜி அரசாங்கத்திடமிருந்து பொருளாதார நன்மைகளையும், சலுகைகளையும் பெற்றுக் கொள்வதற்காக இந்தத் திட்டமிட்ட கொலைகளுக்கு உதவி புரிந்தது தெரிய வந்துள்ளதாக ஜேர்மனியின் ஹனோவர் (Hanover) நகரின் அரச வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஒஸ்கார், ஒரு காவலர் என்ற முறையில் அங்கு நடந்த கொடுமைகளுக்குத் தாம் ஒரு சாட்சியாக இருக்கின்ற போதும், எந்தவித குற்றச் செயல்களிலும் தான் ஈடுபடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

www.padippakam.com

# ‘கல்கி’ யாழ்ப்பாணத் தமிழைத் தமிழாகப் பார்க்கவில்லையா?

‘கல்கி’ வார இதழின் ஆசிரியராக நீண்ட காலம் பணி புரிந்தவர் ரா.கிருஸ்ணமூர்த்தி. ‘கல்கி’ என்ற புனைபெயரில் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் உட்பட பல புகழ்பெற்ற சரித்திர நாவல்களையும், ஏராளமான நகைச்சுவை ததும்பிய சிறுகதைகளையும் எழுதி பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் இதயங்களைக் கவர்ந்தவர் அவர்.

அவர் 1950ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கையில் சுற்றுப்பயணம் செய்தார். அப்பொழுது யாழ்ப்பாணத்துக்கும் சென்றார். இலங்கை சென்று வந்த பின்னர் “யான் கண்ட இலங்கை” என்ற ஒரு பயண நூலை தனது வழமையான நகைச்சுவையுடன் எழுதி வெளியிட்டார். அந்நூலில் யாழ்ப்பாணத்தவர்கள் பேசும் தமிழை நன்கு சிலாகித்தும் எழுதியுள்ளார்.

ஆயினும் அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தவர்கள் பேசும் தமிழை அவர் சரியான தமிழாக அங்கீகரிக்கவில்லையோ என்ற ஐயம் அவரது எழுத்தில் தென்படுகிறது. உதாரணமாக, அவரது “நீண்ட முகவுரை” என்ற உண்மை தழுவிய சிறுகதையில் (எட்டயபுரத்தில் இருந்த போது 17-4-1947இல் எழுதியது) பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

“ஆசிரமத் தொண்டாகளில் முக்கியமான இன்னொரு மனிதர் ஸ்ரீ சிவகுருநாதன். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். சாதாரணமாக யாழ்ப்பாணத்தார் தமிழ் பேசும் விதம் நம்முடைய பேச்சு முறையோடு கொஞ்சம் மாறுபட்டிருக்கும். ஸ்ரீ சிவகுருநாதன் பேசும் தமிழைத் தமிழ் என்று தெரிந்து கொள்வதே கடினம். மறுமலர்ச்சித் தமிழைக்கூடத் தெரிந்து கொண்டாலும் கொள்ளலாம். ஸ்ரீ சிவகுருநாதனுடைய தமிழை ஆதிசிவனாலும், அகத்தியனாலும்கூடத் தெரிந்து கொள்ள முடியாது. பேச்சினால் புரிய வைக்க முடியாததை ஸ்ரீ சிவகுருநாதன் சிரிப்பினால் விளங்க வைத்து விடுவார்.....

ஸ்ரீ சிவகுருநாதனுக்குத் தெரியாத விசயம் உலகத்தில் ஒன்றுமே இல்லை.

“மூன்று புளிய மரங்கள் சேர்ந்து ஒன்றேகால் வருசத்தில் எவ்வளவு காய்க்கும்?” என்றால் பதில் சொல்வார்.

“ஒரு சேர் பசும்பால், ஒரு சேர் ஆட்டுப்பால், ஒரு சேர் புலிப்பால்...இவற்றின் சராசரி நிறை என்ன?” என்று கேட்டால், பளிச்சென்று பதில் கிடைக்கும்.

“இந்தக் கிணற்றிலே மூன்று அடி தண்ணீர் இருக்கிறதே? இதற்கு நாலு அடிக்கு அப்பால் தோண்டி எடுக்கும் கிணற்றில் ஏன் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை?” என்று கேட்டால் அதற்கும் ஏதாவது விடை கிடைக்கும்.

எனினும் அவர் என்ன சொன்னால்தான் என்ன? நமக்கு ஒன்றுமே தெரியப்போவதில்லை!”




## சிங்களத்தில் தமிழ் காப்பியங்கள்!

தமிழ் நூல்கள் சிங்களத்தில் வந்துள்ளது உங்களுக்குத் தெரியுமா? சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி மூன்றும் சிங்களத்தில் உள்ளது. மொழிபெயர்த்தவர் ஒரு சிங்களவர். இவர் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கப் பண்டிதரான தவத்திரு தருமரத்தின தேரர். இவர் 1972இல் காலமானார். சமீபத்தில் இவருடைய சீடரான இசெல்லை இரத்தினசீகர தேரரை சந்தித்து வந்துள்ளார் தமிழறிஞர் மறவன்புலவு கே.சச்சிதானந்தம்.

**- கருவாயன், சென்னை (நன்றி: கல்கி)**

## சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் காய்கறிகளும், கீரை வகைகளும்

| | |
|---|---|
| வாழைப்பூ | முருங்கைக்கீரை |
| வாழைக்காய் | அகத்திக்கீரை |
| வாழைத்தண்டு | பொன்னாங்கண்ணி |
| வெள்ளைப்பூசணி | சிறு கீரை |
| முட்டைகோஸ் | அரைக்கீரை |
| கொலி:ப்ளவர் | வல்லாரை |
| கத்திரிக்காய் | தூதுவளை |
| வெண்டைக்காய் | முசுமுசுக்கையிலை |
| முருங்கைக்காய் | துத்திக்கீரை |
| புடலங்காய் | மணத்தக்காளிகீரை |
| பாகற்காய் | வெந்தயக்கீரை |
| சுண்டைக்காய் | கொத்தமல்லியிலை |
| கோவைக்காய் | கறிவேப்பிலை |
| பீர்க்கங்காய் | சிறுகுறிஞ்சானிலை |
| அவரைக்காய் | புதினா |

## தாஜ்மகால்

இந்தியாவில் தனது மனைவி மும்தாஜூக்காக பேரரசர் ஸாஜகானால் கட்டப்பட்ட புகழ்பெற்ற தாஜ்மகால் கட்டிடத்தைக் கட்டி முடிக்க 22 ஆண்டுகள் பிடித்தது.
இதன் கட்டுமானப் பணிகளில் 25,000 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அன்றைய பணப் பெறுமதியில் இதைக் கட்டி முடிக்க 3 கோடியே, 17 இலட்சத்து, 48 ஆயிரத்து, 26 ரூபாய்கள் செலவானது.

## தாஜ்மகால் குறித்து கால்மார்க்ஸ்

“தாஜ்மகால் இரண்டுமுறை கட்டப்பட்டது. மும்தாஜூக்காக ஸாஜகானால் யமுனை நதிக்கரையின் ஓரம் ஒருமுறை கட்டப்பட்டது. ஆனால், அதற்கு முன்பே அதைப் படைத்த கட்டடக் கலைஞனின் சிந்தனையில் அது ஒருமுறையும் கட்டப்பட்டது”


படிப்பகம்

www.padippakam.com

# தமிழக அரசியல்வாதிகள் குறித்து நடிகர் சிவகுமார் கருத்து

**கேள்வி:** எல்லா விசயங்களிலும் நல்லவரான நீங்கள் அரசியலில் ஈடுபடலாமே?

**பதில்:** சென்னையில் இருந்து கோவைக்கு ஒரு முதலமைச்சர் ரயில்ல போறார். நடுராத்திரியில டி.டி.ஆரை எழுப்பி, "இந்த நிமிசத்தில் இருந்து என் மகன் மேஜர் ஆகிவிட்டான். அவனுக்கு இப்போ 18 வயசு. சேலம் ~ கோவைக்கு முழு டிக்கெட் கொடு'னு கேட்டவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்.

உயிர் போகும்போது தலையணைக்கு அடியில் வெறும் 140 ரூபாய் மட்டும் வெச்சிருந்தார் ஒன்பது வருசங்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சரா இருந்த காமராஜர். அவங்க காலத்தில் அரசியல்ல இறங்கியிருந்தா, கௌரவமாகவும் பெருமையாகவும் இருந்திருக்கும்.

(முன்னணி தமிழ் நடிகர்களில் ஒருவரான சிவகுமார் 'ஆனந்தவிகடன்' வார இதழுக்கு அளித்த பேட்டியொன்றில் இப்படிக் கூறியிருக்கிறார். சிவகுமாரின் இந்தக் கருத்தைப் படிக்கும் போது, அவர் 'புரட்சித் தலைவி'யையும், 'கலைஞரை'யும் மனதில் வைத்துக்கொண்டு சொல்வது போலத் தோன்றவில்லையா?)

# கிருதயுகத்தினைக் கொணர்வேன் - பாரதியின் சபதம்

நமக்குத் தொழில் நாட்டிற்குழைத்தல்

இமைப்பொழுதும் சோராதிருத்தல்

அச்சமில்லை அழுங்குதல் இல்லை

நடுங்குதல் இல்லை நாணுதல் இல்லை

பாவமில்லை பதுங்குதல் இல்லை

பேசாப்பொருளை பேச நான் துணிந்தேன்

பொய்க்கும் கலியை நான் கொன்று

பூலோகத்தார் கண் முன்னே

மெய்க்கும் கிருதயுகத்தினைக்

கொணர்வேன்

தெய்வ விதி இஃதே.

(2014 செப்ரெம்பர் 11ஆம் திகதி மகாகவி சுப்பிரமணிய பாரதியின் 93ஆவது நினைவு தினம் ஆகும்)

# ரோடியோலா என்னும் சஞ்சீவினி

இமயமலைச் சிகரத்தின் குன்றுகளில் வளரும் ஒரு மூலிகைச் செடி உடலின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. புராணக் கதைகளில் கூறப்படும் சஞ்சீவினியைப் போன்றதொரு மூலிகை இது.

அத்துடன் மலைப் பகுதியில் மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ப உடலைத் தகவமைத்துக் கொள்ளவும், கதிரியக்கப் பாதிப்பைத் தடுக்கவும் இந்த மூலிகை உணவு உதவுவதாகத் தெரியவந்துள்ளது.

ராமாயணத்தில் லக்ஷ்மணனைக் காப்பாற்ற அனுமன் கொண்டுவந்த சஞ்சீவினி மூலிகை இந்தியாவில் இருப்பதற்கான சாத்தியம் உள்ளதா என விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள். இந்நிலையில் ரோடியோலா (Rhodiola) மூலிகைச் செடிதான் ராமாயணத்தில் சஞ்சீவினி என்று குறிப்பிடப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

லடாக் பகுதி மக்களிடையே இந்த மூலிகைக்கு 'சோலோ' என்று பெயர். இதன் நற்பண்புகள் பற்றி அங்குள்ளவர்களுக்கு பெரிதாகத் தெரியவில்லை. அதேநேரம், இந்தச் செடியின் இலையைக் கீரை போலச் சமைத்து இப்பகுதி மக்கள் உண்கின்றனர். லே பகுதியைச் சேர்ந்த உயர்மலைப் பகுதி ராணுவ ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த மூலிகைச் செடியின் மருத்துவக் குணங்கள் குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள்.

"உயிர்வேதி ஆயுத யுத்தத்தில் வெளியாகும் காமா கதிர்கள் உடலில் ஊறு ஏற்படுத்தாதவாறு இம்மூலிகையால் தடுக்கமுடியும்" என்கிறார் ராணுவ ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஆர்.பி.ஸ்ரீவாஸ்தவா.

லேயில் உள்ள ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தினரும் இந்த அதிசய மூலிகை குறித்துக் கடந்த பத்தாண்டுகளாக ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

"குறைந்த காற்றழுத்தம், ஆக்சிஜன் குறைவு ஆகியவற்றால் அவதிப்படும் ராணுவ வீரர்களுக்கு இந்த மூலிகை உதவிகரமாக இருக்கும். அத்துடன் இம்மூலிகைக்கு மனஅழுத்தத்தை குணப்படுத்தும், பசியைத் தூண்டும் அம்சமும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது" என்கிறார் ஸ்ரீவாஸ்தவா.

**- தமிழில்: ஷங்கர் (நன்றி: தி இந்து)**

# இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள்

இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் 1 இலட்சத்து, இரண்டாயிரத்து, 241 இலங்கை அகதிகள் வசிப்பதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலோர் 1983இன் பின்னர் இலங்கையில் அரசாங்கத்துக்கும், தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கும் இடையில் போர் ஆரம்பமான பின்னர் பாதுகாப்புத் தேடி பாக்கு நீரிணை ஊடாக வள்ளங்களில் தமிழகக் கரையைச் சென்றடைந்தவர்கள் ஆவர்.

இந்தப் பயணங்களின் போது கடல் கொந்தளிப்பு, காற்றினால் திசை மாறியமை, வள்ளங்களில் ஏற்பட்ட கோளாறுகள், இலங்கைக் கடற்படையின் தாக்குதல் என்பவற்றால் பல நூறு பேர்கள் வரை மரணித்துள்ளனர். அப்படி மரணித்தவர்களின் சரியான தொகை மற்றும் பெயர் விபரங்கள் என்பன இதுவரை எவராலும் ஆவணப்படுத்தப்பட்டதாக தகவல் இல்லை.
*

www.padippakam.com

# உலகப் போக்கும் உலக சக்திகளின் சம நிலையும்

உலகத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக இரண்டு மகா யுத்தங்களின் பின்னர் (1914 – 18 மற்றும் 1939 – 45) தோன்றிய இருமுனை (Bipolar) உலகப் போக்கு சோசலிச முகாமை வீழ்த்திய பின்னர் (1989 – 91) ஒருமுனை உலகப் போக்காக மாறியது. சோசலிச முகாமை உடைத்தெறிந்து இப்போது 25 ஆண்டுகள் கடந்து போயுள்ளன. இக்காலகட்டத்தில் முதலாளித்துவம் உலக ரீதியாக விரிவடைந்ததின் காரணமாகவும், உலகமயமாக்கம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பனவற்றின் வளர்ச்சியின் ஊடாகவும், மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

முதலாளித்துவத்திற்கே உரித்தான உள்ளக முரண்பாடுகள் கூர்மையடைந்ததின் காரணமாக, மேற்படி ஒருமுனை உலகப் போக்கு பலமுனை உலகப் போக்காக மாறியுள்ளது. சீனப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட துரிதமானதும், ஆச்சரியகரமானதுமான வளர்ச்சி இதில் தாக்கம் ஏற்படுத்திய தீர்மானகரமான காரணியாக நாம் அடையாளம் காண்கின்றோம். அதேசமயம், ஆசியப் பொருளாதாரத்தின் துரிதமான வளர்ச்சி, இலத்தீன் அமெரிக்க மக்களின் எழுச்சி, ரீயா சோவியத் பிராந்தியத்தைச் சார்ந்த ஆசியப் பிராந்தியத்தின் ஒருங்கிணைப்பு, ஆபிரிக்க கண்டம் ஜனநாயகத்தை நோக்கிப் பயணித்தல், ஆகிய பல்வேறு காரணிகள் பல்முனை உலகப் போக்கை நிர்மாணிப்பதற்கு தாக்கம் செலுத்திய பிற காரணிகளாக அமைந்துள்ளன.

சீனாவின் துரித பொருளாதார வளர்ச்சி ஏனைய ஆசிய நாடுகள் எழுச்சியுறும் பொருளாதார சக்திகளாக மாற்றம் அடைவதற்கு உந்துதலை ஏற்படுத்தி, ஆசியப் பொருளாதாரம் உலகின் பிரதான பொருளாதாரப் பிராந்தியமாக மாறியுள்ளது.

உலகின் சகல பொருளாதாரப் பிராந்தியங்களுடனும் வர்த்தக உறவுகளை அமைத்ததின் மூலம் சீனப் பொருளாதாரம் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தியாக மாறியுள்ளது.

கிழக்கு ஆசியா, ஆசியப் பொருளாதாரத்தில் முன்னணியில் இருக்கும் ஒரு பொருளாதாரப் பிராந்தியமாகும்.

ஆசியப் பொருளாதாரம், உலகப் பொருளாதாரத்தின் சக்திவாய்ந்த ஒரு அம்சமாக மாறியுள்ளது. ஆசியாக் கண்டத்தின் மூன்று பொருளாதாரப் பிராந்தியங்கள் (சீனாவை முதன்மையாகக் கொண்ட கிழக்கு ஆசியா, ''ஆசியான்'' என்று அழைக்கப்படும் தூர கிழக்கு ஆசியா, ''சார்க்'' என அழைக்கப்படும் தென் ஆசியா) ஆசியாவில் முன்னணியில் இருக்கின்றன.



தென் சீனக்கடலில் எண்ணெய் வளம் கொண்ட தீவுகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளில் பிரவேசிப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருக்கின்றனர். ஏற்கெனவே இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் ஏற்புடைய இனத்துவ, மத அடிப்படைவாதமும், பயங்கரவாதப் போக்குகளும் உக்கிரமடைந்துள்ளன. இந்நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகள் தமது உபாய மார்க்கங்களை ஆரம்பித்துள்ளன.

இதனிடையே இந்தியப் பொதுத் தேர்தலின் பெறுபேறுகளின் மூலம் ஏற்பட்டுள்ள இந்திய புதிய வலதுசாரி அரசியல், ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஒரு சிறந்த தரிப்பிடமாகும். ஆனால், நிலவும் உலக சம நிலையிலும், ஆசியப் பொருளாதார சூழமைவிலும், அவர்களுடைய உபாய மார்க்க ரீதியான குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வது அவ்வளவு இலகுவானது அல்ல. சீனாவுக்கும் ரஸ்யாவுக்கும் இடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்ட நீண்டகால பொருளாதார உடன்படிக்கைகள் ஏகாதிபத்தியங்களுக்கு பாரிய சவாலாகும்.

இந்நிலைமைகளின் கீழ் ஆசியாவின் இடதுசாரி மற்றும் பெருமாற்றச் சக்திகளுக்கிடையில் ஆழமான கலந்துரையாடல் தேவைப்படுகின்றது.

### தென் ஆசியப் பிராந்தியம்

எழுச்சியுறும் ஆசியாக் கண்டத்தின் பிராந்தியங்களுக்கு இடையே தென்னாசியாவே பின்னடைவு நிலையில் உள்ளது. சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக, இப்பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் இனவாத, மதவாத, பயங்கரவாதப் போக்குகளுக்கும், போதை வஸ்து தொந்தரவுகளுக்கும் இரையாகி உள்ளன. பல்வேறு மட்டங்களிலான முதலாளித்துவ அபிவிருத்தி ஏற்படும் இப்பிராந்தியத்தில் அமைந்துள்ள நாடுகள் ஏகாதிபத்தியத்தின் இலக்குகளாக மாறியுள்ளன.

எழுச்சியுற்று வரும் இரண்டு பொருளாதார சக்திகளான சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே அமெரிக்கா தனது சர்வதேச உபாய மார்க்கங்களை நெறிப்படுத்துகிறது. அதேசமயம் தனது முழுக் கவனத்தையும் ஆசியாக் கண்டத்தின் மீது செலுத்தி வருகிறது. குறிப்பாக இப்பிராந்தியத்தில் தனது பூகோள உலகமய நடவடிக்கைகளுக்கு மாத்திரமல்லாது, பூகோள அரசியலின் அவசியங்களுக்காகவும், இம்முரண்பாடுகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து உள்ளது.

### சர்வதேச கம்யூ னிஸ்ட் இயக்கம்

1989 – 91 துன்பியல் சம்பவங்கள் சோசலிச முகாமின் வீழ்ச்சிக்கு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் பின்னடைவதற்கும் முக்கிய காரணியாக அமைந்தது. அதன் பெறுபேறாக பூகோளமயமாக்கல் துரிதமாகியது. அதன் உந்து சக்தியாக புதிய தாராள (லிபரல்) பொருளாதார உபாய மார்க்கம் உலகப் பொருளாதாரக் கட்டமைப்பிற்குள்ளும், தேசிய அரசுகளின் உள்நாட்டு பொருளாதாரத்திலும், பாரிய மறுசீரமைப்புகளுக்குக் காரணிகளாக அமைந்தன. இவை தொழிலாளி வர்க்கத்தின் விரிவாக்கத்திற்கும், தாக்கங்களுக்கும் பல்வேறு சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

இவ்விரண்டு மையக் காரணிகள் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பின்னடைவுகளுக்கு காரணமாக அமைந்தன.

புதிய சூழமைவின் கீழ் ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கிடையிலுமான முரண்பாடு கூர்மையடையும். அதே சமயம், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கிடையேயும் முரண்பாடுகள் கூர்மையடையும்.

இந்நிலைமைகளின் கீழ் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகள்

www.padippakam.com

குறையும். அதேசமயம், உலகம் பூராவும் மூலதனத்திற்கும், உழைப்பிற்கும் இடையே நிலவும் முரண்பாடுகள் கூர்மையடைவது சற்றுத் தூரத்தில் அமையும்.

எதிர்காலத்தில் ஏற்படும் உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு அமைய இம் முரண்பாடுகள் எவ்வாறாக, எவ்வளவு விரைவில் கூர்மையடையும் எனக் கூற முடியாது. உலகத்தில் ஏற்படும் மாற்றங்கள், உலக வல்லரசுகளிடையே ஏற்படும் வளர்ச்சி மாற்றங்கள் என்பனவே இவற்றைத் தீர்மானிக்கும்.

எனவே சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் குறுகிய கால உபாய மார்க்கங்களாக ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையேயான, ஏகாதிபத்தியத்துக்கும் வளர்ச்சியடையும் நாடுகளுக்கும் இடையேயான, முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்யும் போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவதே எமது கடமையாகும்.

குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் செயற்படும் இடதுசாரி சக்திகளுக்கு இவ்வரலாற்றுக் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக பலவீனமடைந்த நிலையில் உள்ள தொழிலாள வர்க்கம் உட்பட உழைக்கும் மக்களுக்கு உயிரூட்டி, மீண்டும் அவர்களை ஸ்தாபனப்படுத்தும் போராட்டங்களை நெறிப்படுத்துவதற்கு மிக உயர்ந்த முன்னுரிமையை வழங்க வேண்டியுள்ளது.

அதேசமயம், மாபெரும் கண்டங்களிலும், பிராந்தியங்களிலும் உலக மட்டத்தில் செயற்படும் இடதுசாரி சக்திகளை ஐக்கியப்படுத்துவதற்கு, ஒன்றிணைந்து செயற்பட வைப்பதற்கு, கண்ணோட்ட ரீதியில் ஆயுதபாணியாக்குவதற்கு, சமூகத்தில் நடைபெறும் மாற்றங்களை அடையாளம் கண்டு, ஏகாதிபத்தியவாதிகளின் புதிய உபாய மார்க்கங்களை அம்பலப்படுத்தி, மேற்படி போராட்டங்களுக்கு கருத்தியல் ரீதியிலான தலைமைத்துவத்தை வழங்குவது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கடமையாகும்.

உலகின் மிகப்பெரும் முதலாளித்துவ ஜனநாயக அரசு எனக் கருதப்படும் இந்தியாவின் பொதுத் தேர்தலில் இடதுசாரி இயக்கம் பின்னடைந்துள்ள காரணத்தை ஆழமாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. தேர்தல் முறைமைக்கு அமைய பாராளுமன்றத்தின் பிரதிநிதித்துவம் குறைந்தாலும், இடதுசாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குகளின் வீதத்தை உயர்மட்டத்தில் பேணுவதற்கு இடதுசாரிகளால் முடிந்துள்ளது. இதன் காரணமாக இடதுசாரிகளின் சமூக அடித்தளம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் தென்னாபிரிக்கத் தேர்தலின் போது, தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி இணைந்துள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பெற்றுள்ள வெற்றி உன்னதமானது.
சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் உலக மற்றும் பிராந்திய மட்டத்தில் இடம் பெற்ற மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பவற்றில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பங்குபற்றியுள்ளது.

கடந்த காலத்தில் தோழமைக் கட்சிகளுடனான எமது உறவுகள் வலுப்பெற்றுள்ளன.

(இந்தப் பகுதி இவ்வருடம் (2014) இரத்தினபுரியில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ் கட்சியின் 20ஆவது தேசிய மாநாட்டு அரசியல் அறிக்கையின் 'சர்வதேச வளர்ச்சி' பின்னணி என்ற பகுதியின் சில முக்கிய அம்சங்களாகும்) *

7ம் பக்கத்தொடர்ச்சி…

## சர்வதேசப் பிளவும் உட்கட்சிப் போராட்டமும்

சோவியத் யூனியனில் அதிகாரத்திலிருந்த குருசேவ் மார்க்சிஸ - லெனினிஸக் கோட்பாடுகளை மாற்றி, ஏகாதிபத்திய நாடுகளுடன் சமாதான சகவாழ்வு என்ற கோட்பாடுகளை முன்வைத்தார். இதனால் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பிளவுபட்டன. குருசேவின் திரிபுவாதக் கருத்துகளை ஆதரித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் பீற்றர் கெனமன், எஸ்.ஏ.விக்கிரமசிங்க முதலியோர் தலைமையில் ஒரு பகுதியினரும், தொழிலாள வர்க்க ஆயுதப் புரட்சி என்ற கருத்துகளை ஆதரித்து மறுபகுதியினரும் பிரிந்தனர். இரண்டாவது அணியைச் சேர்ந்த தோழர்கள் பிரேம்லால் குமாரசிறி, மு.கார்த்திகேசன், என்.சண்முகதாசன், ஆரியவன்ஸ குணசேகர ஆகியோர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை (சீனசார்பு) 1963ஆம் ஆண்டு ஸ்தாபித்தனர். தோழர் கார்த்திகேசன் சமூகத்திலுள்ள எல்லா மட்டத்து மக்களுடனும் அன்பாகவும் நெருக்கமாகவும் பழகினார். பஸ்சிலும் சைக்கிளிலும் பிரயாணம் செய்து, பின்தங்கிய பிரதேசங்களில் அரசியல் வேலை செய்து, வட பிரதேசத்தில் பலமிக்க ஒரு ஸ்தாபனமாக கம்யூனிஸ்ட் கட்சி வளர்வதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தார்.

பின்னர் உட்கட்சியில் பல தத்துவார்த்த மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக 1972இல் தோழர் கார்த்திகேசன், தோழர்கள் வாட்சன் பெர்னாண்டோ, ஆரியவன்ஸ குணசேகர வீ.ஏ.கந்தசாமி, போன்றவர்களுடன் இணைந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என்ற கட்சியை உருவாக்கி தனது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தார். இக்காலகட்டத்தில் அக்கட்சியின் 'போராளி' பத்திரிகைக்கு பல கட்டுரைகளை எழுதினார். கார்த்திகேசனின் வழிகாட்டலில் உருவான பலர் இன்று அரசியல், பொருளாதார, சமூக, கலை இலக்கியத்துறைகளில் முத்திரை பதித்துள்ளனர். அவர் கைக்கொண்ட மார்க்சிஸ - லெனினிஸ சமூக விஞ்ஞானத்தை கருவியாகக் கொண்டு சமூக மாற்றத்திற்காக அவர் சென்ற அடிச்சுவட்டைப் பின் தொடர்வதே தோழர் கார்த்திகேசன் அவர்களை நினைவுகூரும் மார்க்கமாகும்.

(தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் மறைந்து (1977 செப்ரெம்பர்) 37ஆவது ஆண்டு நிறைவு நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை 2002 நொவெம்பரில் அவரது புதல்வி ஜானகி பாலகிருஸ்ணன் தொகுத்து வெளியிட்ட 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டு மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது)
*


படிப்பகம்

www.padippakam.com

# மூத்த ரொட்ஸ்கிஸ - தொழிற்சங்க தலைவர் பாலா தம்பு 92ஆவது வயதில் காலமானார்!



*23.05.1922 – 01.09.2014*

இலங்கையின் மூத்த ரொட்ஸ்கிஸவாத தலைவர்களில் ஒருவரும், தொழிற்சங்க தலைவருமான பிலிப்ஸ் பாலேந்திரா தம்பு சுகவீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் 2014 செப்ரெம்பர் 1ஆம் திகதி தமது 92ஆவது வயதில் காலமானார்.

நீர்கொழும்பில் பிறந்த அவர், தமது ஆரம்ப கால கல்வியை நீர்கொழும்பில் முடித்த பின்னர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து பட்டதாரியானார். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்திலும் வெளிவாரிப் பட்டதாரியாகப் பட்டம் பெற்றார். அதன் பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் இணைந்து பட்டம் பெற்று சட்டத்தரணியானார்.

இடதுசாரி அரசியலில் ஆர்வம் கொண்ட அவர் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து டொக்டர் என்எம்.பெரோரா, டொக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா போன்றோருடன் கூட்டாகச் செயற்பட்டார்.

ஆனால் சமசமாஜக் கட்சி 1963இல் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுடன் இணைந்ததைத் தொடர்ந்து, அக்கட்சியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களான எட்மன் சமரக்கொடி, மெரில் பெர்னாண்டோ ஆகியோருடன் பாலாதம்புவும் கட்சியிலிருந்து வெளியேறினார்.

பின்னர் சமரக்கொடியும், தம்புவும் இணைந்து புரட்சிவாத சமசமாஜக் கட்சி என்றொரு கட்சியை உருவாக்கி, தாம்தான் இலங்கையில் நான்காம் அகிலத்தின் அங்கீகாரம் பெற்ற உண்மையான ரொட்ஸ்கிஸவாதக் கட்சி எனக் கூறிச் செயல்பட்டனர். ஆனால் விரைவிலேயே சமரக்கொடிக்கும் தம்புவுக்கும் முரண்பாடு ஏற்பட்டதால், தம்பு அக்கட்சியிலிருந்து வெளியேறி, சமசமாஜ புரட்சிவாத கட்சி என்ற பெயரில் செயல்பட்டார். சிறிது காலத்தின் பின்னர் அக்கட்சியின் பெயரை புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி என மாற்றிக் கொண்டார்.

பாலாதம்பு இன்னொரு புரட்சிகர கம்யூனிஸ்ட் இடதுசாரித் தலைவரும், தொழிற்சங்கத் தலைவருமான நா.சண்முகதாசன் போன்று கொழும்பு மத்திய தொகுதியில் தேர்தலில் போட்டியிட்ட போதிலும், இருவருமே மிகச் சொற்ப வாக்குகள் மட்டும் பெற்று பாராளுமன்ற அரசியலில் தோல்வியைத் தழுவினர். அதன் பின்னர் அவர்கள் இருவரும் அந்த முயற்சியில் இறங்கவில்லை.

பாராளுமன்ற அரசியல் பாலா தம்புவுக்கு கைகொடுக்காத போதும், தொழிற்சங்கத்துறை அவரை முடிசூடா மன்னனாக வைத்திருந்து கௌரவித்தது. 1948ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை அவர் சி.எம்.யு என அழைக்கப்பட்ட இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் (Ceylon Mercantile Union) ஆயுட்காலப் பொதுச் செயலாளராகப் பதவி வகித்தார். இலங்கை வங்கி ஊழியர் சங்கத்திலும் அவரது செல்வாக்கும், வழிகாட்டலும் இருந்தது.

தொழிற்சங்க வழக்குகளில் சண்முகதாசன் போன்று பாலா தம்புவும் மிகத் திறமையாக வாதிடக்கூடியவர். ஆனாலும் அவர் மீது பிரதான இடதுசாரிக் கட்சிகள் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை முன்வைத்தே வந்துள்ளன. அவரும் சண்முகதாசனும் இடதுசாரி ஐக்கியத்தைச் சீர்குலைக்கிறார்கள் என்பது ஒரு பொதுவான குற்றச்சாட்டு.

அது தவிர, பாலா தம்பு தான், மேற்கத்தைய நாடுகளில் உள்ளது போன்று தொழிலாளர்களை போராட்டத்துக்கு வழி நடாத்தாமல், முதலாளி வர்க்கத்துடன் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி கூட்டு ஒப்பந்தங்களை உருவாக்கும் முறையை இலங்கையில் அறிமுகப்படுத்தியவர் என்ற வகையில், அவர் தொழிலாளர்களின் வர்க்க உணர்வை மழுங்கடிக்கிறார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டது.

அரசியல் துறையைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட (1977 - 1994) கொடூர ஆட்சியின் போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொல்லப்பட்ட, கைது செய்யப்பட்ட பல தமிழ் - சிங்கள இளைஞர்களின் சார்பாக பல வழக்குகளில் பாலா தம்பு வாதாடி இருக்கிறார்.

பாலா தம்பு மறைந்தாலும், அவரால் கட்டியெழுப்பப்பட்ட இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் என்ற ஸ்தாபனமும், அச்சங்கத்துக்கென அவர் கொள்ளுப்பிட்டியில் கட்டியெழுப்பிய சொந்தக் கட்டிடமும் அவரது நாமத்தை என்றும் பறைசாற்றி நிற்கும்.

**– நாதன்**

**வானவில்லின் அனைத்து இதழ்களையும் பார்வையிடுவதற்கு:**
**http://manikkural.wordpress.com/**

www.padippakam.com

# வடக்கில் கொடி கட்டிப் பறக்கிறது இலஞ்சமும் ஊழலும்!



**போர்** முடிவுற்று ஊரடங்கு சட்டமும் கெடுபிடிகளும் இலங்கையின் வட பகுதியில் நீக்கப்பட்ட பின்னர், மக்களின் சுதந்திர வாழ்வு மீண்டும் மலர்ந்துள்ளது உண்மைதான். ஆனால் அதேநேரத்தில் கலாச்சாரச் சீரழிவுகளும், மோசடிகளும், ஏமாற்று வேலைகளும் கூட சுதந்திரமாகவும், தாராளமாகவும் தலைவிரித்தாடுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வரிசையில் இப்பொழுது இலஞ்சம், ஊழல் என்பனவும் போட்டிபோடத் தொடங்கியுள்ளன. இது சம்பந்தமாக இலவச சட்ட ஆலோசனை நிலையத்தின் வட பிராந்திய காரியாலயத்தில் இவ்வருடம் தை மாதத்திலிருந்து ஆடி மாதம் வரையான ஏழு மாத காலத்தில் 929 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதன் வட பிராந்திய இணைப்பாளர் ரவீந்திர டி சில்வா தெரிவித்திருக்கிறார். அவர் தெரிவித்திருக்கும் தகவல் அங்குள்ள நிலைமையின் பாரதுாரத்தை எடுத்துக் காட்டுகிறது.

கூடுதலான குற்றச்சாட்டுகள் நில அபகரிப்பு சம்பந்தமானவை என அவர் தெரிவித்துள்ளார். இதுதவிர, இந்திய வீடமைப்புத் திட்டத்தில் முறைகேடுகள், அரச திணைக்களங்களில் ஊழல் - மோசடி, பணக் கொடுக்கல் - வாங்கல் பிரச்சினைகள் என்பன சம்பந்தமான முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னொரு விடயம் சில அமைச்சர்களின் சிபார்சுகளின் அடிப்படையில் சிலருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதால், தகுதி அடிப்படையில் போட்டியிடும் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நில அபகரிப்பு சம்பந்தமாக 'வானவில்' வடக்கிலுள்ள சிலரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அது இரண்டு விதமாக நடைபெறுவதாகக் கூறினார்கள்.

ஒன்று, கடந்த யுத்த காலத்தில் வட பகுதி மக்கள் தென்னிலங்கைக்கும், வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்து சென்றதால் அவர்களுடைய வீடு, காணி போன்ற சொத்துகளை உறவினர்கள் அல்லது நண்பர்களிடம் கையளித்துச் சென்றனர். யுத்தம் முடிவுற்ற பின்னர் அவர்கள் திரும்பி வந்து தமது சொத்துக்களைப் பெற முயலும் போது, அவற்றை அதுவரை பராமரித்து வந்தவர்கள் திருப்பி கையளிக்க மறுக்கிறார்கள். அல்லது அவற்றைக் கையளிப்பதற்கு பிரதியுபகாரமாக பெரும் தொகை பணத்தை எதிர்பார்க்கின்றனர்.

இதுதவிர, அனாதரவாக இருந்த காணிகள் அல்லது வீடுகளை உரிமையாளர்களின் அனுமதியின்றி கையகப்படுத்தியோரும் அவற்றை மீளளிக்க விரும்புகிறார்கள் இல்லை. இதில் இன்னொரு பிரச்சினை என்னவெனில், இந்தச் சொத்துகளின் உரிமையாளர்கள் சிலரிடம் யுத்தகால இடப்பெயர்வு காரணமாக தற்போது உறுதிகள் இல்லாமல் இருப்பது. வேறு சில காணிகளைப் பொறுத்தவரை அவைகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலருக்கு பங்காகவும் இருக்கின்றன.

பொதுமக்கள் மத்தியிலான முறைப்பாடுகள் தவிர, நில அபகரிப்பு தொடர்பான முறைப்பாடுகளில் இராணுவத்தினருக்கு எதிரான முறைப்பாடுகளும் உள்ளடங்கியுள்ளதாக வட பிராந்திய இணைப்பாளர் ரவீந்திர டி சில்வா குறிப்பிட்டிருக்கிறார். *

# ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை போதுமானதா?




**வ**ருமானத்துக்கு மேலதிகமாக சொத்துச் சேர்த்தார் என்று குற்றம்சாட்டி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் மீது தொடரப்பட்ட வழக்கில் பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் அவருக்கு 4 வருட சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது. அத்துடன் அவருடன் சேர்ந்து ஊழல் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் அவரது ஆருயிர் தோழி சசிகலா, சகாக்களான இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோருக்கும் தலா 4 வருடச் சிறைத் தண்டனையும், 10 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நால்வரும் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்துள்ள போதும், அவர்கள் குற்றவாளிகள்தான் என்பதை, பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் பல்வேறு அசைக்க முடியாத ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது. இந்த நிலைமையில் உச்ச நீதிமன்றம் அதிகாரம், செல்வாக்கு என்பன காரணமாக தீர்ப்பை மாற்றி அவர்களை விடுதலை செய்யுமாயின், அல்லது தீர்ப்பின் வலுவைக் குறைக்குமாயின், அது இந்திய நீதித்துறையின் மீது இந்திய மக்களுக்கும், உலக மக்களுக்கும் அவநம்பிக்கையையே ஏற்படுத்தும்.

தமிழகத்தின் சாதாரண மக்களுக்கு ஜெயலலிதாவும், கருணாநிதியும் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி எப்படிச் சொத்துகளைக் குவித்தார்கள் என்பது நன்றாகத் தெரியும். அத்துடன் தான் குற்றமற்றவர் என்றால், இந்த வழக்கை உரிய காலத்தில் முடிக்க விடாமல் சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி 18 வருடங்களாக ஏன் ஜெயலலிதா


படிப்பகம்

www.padippakam.com

இழுத்தடித்தார் என்ற கனதியான ஒரு கேள்வியும் இருக்கிறது. எனவே உண்மை என்பதை சட்டங்களைப் பயன்படுத்தி மறைத்தாலும், மக்கள் முன்னிலையில் அது பட்டவர்த்தனமானது

இந்த வழக்கில் ஜெயலலிதா குற்றவாளி எனக் காணப்பட்டதும், தான் நோயாளி என்றும், தனக்கு குறைவான தண்டனையை வழங்குமாறும் ஜெயலலிதா நீதிபதியிடம் வேண்டினார். அதேபோல, அவர் சார்பில் வாதாடிய வழக்கறிஞர், ஜெயலலிதாவை பிணையில் விடும் படியும், வேண்டுமானால் அவர் தனது வீட்டுக் காவலில் இருக்கத் தயார் என்றும், நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார். 18 வருடங்களாக வழக்கை இழுத்தடித்து, தான் நிரபராதி என்று வாதிட்டவர், இவ்வாறான வேண்டுகோள்களை விடுத்ததின் மூலம், தான் குற்றம் செய்தவர்தான், ஆனால் நோயாளி என்றபடியால் கடுமையான தண்டனை வழங்க வேண்டாம் என ஒத்துக் கொண்டதைத்தானே இது எடுத்துக் காட்டுகிறது.

இன்னொரு பக்கத்தில், ஜெயலலிதாவுக்கும் அவரது சகாக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள தண்டனை போதுமானதா என்ற கேள்வியும் இருக்கிறது. ஏனெனில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற, மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய ஒருவர், செய்கின்ற ஊழலும், மோசடியும், அதிகாரத் துஸ்பிரயோகமும் பாரதூரமானவை. அப்படியான ஒரு குற்றத்துக்கு வெறுமனே 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்பது ஒரு கண்துடைப்பு என்றே மக்கள் கருத இடமுண்டு.

அத்துடன், 18 வருடங்களுக்கு முன்னர் ஜெயலலிதா வருமானத்துக்கு மிஞ்சி சேர்த்த 66 கோடி ரூபாவின் இன்றைய பெறுமதி 2,500 கோடி ரூபா என, ஜெயலலிதா வழக்கில் அரச தரப்பு வக்கீலாக வாதிட்ட பவானிசிங் நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார். அப்படிப் பார்த்தால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள 100 கோடி ரூபா அபராதம், அவர் தவறான வழியில் சேர்த்த பணத்தின் இருபத்தைந்தில் ஒரு மடங்கு மட்டுமே. அப்படிப் பார்த்தால் 4 வருட சிறை வாசத்தின் பின்னர் அவர் தவறான வழியில் சேர்த்த 2,400 கோடி ரூபா பணத்துடன் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

மறுபக்கத்தில், ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரான கருணாநிதியை கலக்கத்தில் ஆழ்த்தியிருப்பதும் தெரிகிறது. ஏற்கெனவே தவறான வழியில் கோடிக்கணக்கான ரூபா பண மோசடியில் ஈடுபட்டதாக அவரது மனைவி, மகள், பேரப்பிள்ளைகள், கட்சிக்காரர்கள் மீது வழக்குகள் இருப்பதால், அவர் ஜெயலலிதாவின் தீர்ப்பால் ஆடிப்போய் இருக்கிறார். அதனால்தான், ஜெயலலிதாவின் தீர்ப்பு வந்ததும், 'எனது சொத்து விபரம் திறந்த புத்தகம்' என்றும், 'எனக்கு இருப்பது கோபாலபுரத்தில் உள்ள ஒரு வீடு மட்டுமே, அதையும் எனது மனைவியின் பெயருக்கு எழுதி விட்டேன்' என்றும் புலம்புகிறார். அவரது இந்த முழுப் பூசனிக்காயை ஒரு கவளம் சோற்றில் மறைக்கும் முயற்சியை தமிழகப் பத்திரிகைகளே எள்ளி நகையாடி இருக்கின்றன.

'உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை' என்ற கவிஞர் கண்ணதாசனின் சினிமாப்பாடல் வரி ஒன்றுதான் இந்த இடத்தில் ஞாபகம் வருகிறது. தமிழக மக்கள் சினிமா மாயைகளிலிருந்தும், தனிநபர் வழிபாட்டிலிருந்தும் விடுபட்டு, இந்த வகையான மோசடிப் பேர்வழிகளை இனம் கண்டு நிராகரிக்காத வரை, திரும்பத் திரும்ப இந்த வகையான மோசடிகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டே இருப்பர் என்பதுதான் உண்மை.

*-தங்கபாலு*

---

முன்பக்கத்தொடர்ச்சி…

தாங்களே மண் அள்ளிப்போடும் செயல் என்ற போதிலும், அது தனியாக ஆராயப்பட வேண்டும்.

ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தவிர்க்க வேண்டும் என அவரை லண்டனில் சந்தித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வலியுறுத்தியதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ரணிலை பலரும் விரும்பாததிற்கு காரணம், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை எதிர்கொள்ளக்கூடிய அளவுக்கு அவர் ஒரு தகுதியான வேட்பாளர் இல்லை என்பதே காரணமாகும். ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் ஐ.தே.க சுமார் இரண்டு டசின் தேர்தல்களில் தோல்வியைக் கண்டுள்ளது.

இந்த நிலைமையில், எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு பொது வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தலாம் என்ற கருத்து சில தரப்புகளால் முன் வைக்கப்படுகிறது. அதற்கு எல்லா எதிர்க்கட்சிகளும் சம்மதிக்குமா என்பது ஒருபுறமிருக்க, யார் அந்த பொது வேட்பாளர் என்ற கேள்வியும் இருக்கின்றது.

நேரடியாக கட்சி சார்பற்றவர்கள் என்ற ரீதியில், முன்னாள் பிரதம நீதியரசர்களான சரத் என் டி சில்வா, சிராணி பண்டாரநாயக்க என்பவர்களின் பெயர்களும், சில பௌத்த மத குருமார்களின் பெயர்களும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. இதில் ஒரு நகைச்சுவை அம்சமாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பெயரையும் யாரோ பிரஸ்தாபித்துள்ளனர். இவர்களில் சிராணி பண்டாரநாயக்க மீது நீதிமன்றங்களில் வழக்குகள் இருப்பதால் அவர் போட்டியிடுவது சாத்தியமில்லை.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ஐ.தே.க தலைவர் ரணில் உட்பட எதிர்க்கட்சிகள் சார்பாக பிரஸ்தாபிக்கப்படும் யாரும் புலிகளை ஒழித்துக்கட்டியதற்கான பெருமையில் பங்கெடுக்க தகுதியில்லாதவர்களாகவே இருக்கின்றனர். அந்த தகுதி ஒரேயொரு நபரான மகிந்த ராஜபக்சவுக்கு மட்டுமே உள்ளது. ஏனெனில் கடந்த தேர்தல்கள் மட்டுமின்றி, எதிர்காலத்தில் நடைபெறப்போகும் தேர்தல்களில் புலிகளின் மீதான வெற்றிப் பெருமை கணிசமான செல்வாக்கைச் செலுத்தப் போகின்றது. ரணிலைப் பொறுத்தவரை சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் அவர் ஒரு 'இனத் துரோகி' என்ற படிமமே ஆழமாக வேரூன்றியுள்ளது. எனவே அவர் போட்டியிட்டால் அவரது கட்சி உறுப்பினர்களைத் தவிர, சாதாரண சிங்களப் பொதுமக்கள் யாருமே அவருக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

சமீபத்தில் நடந்து முடிந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் வாக்குகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை அடுத்து எதிர்க்கட்சிகள் பலவற்றுக்கும், இலங்கையில் தமக்குச் சாதகமான ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என விரும்பும் மேற்குலக சக்திகளுக்கும் ஒரு சிறிய நம்பிக்கை


படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்டிருப்பதை அவதானிக்க.முடிகிறது. ஆனால் ஊவா மாகாணசபை தேர்தல் முடிவை 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற கணக்கில் எடுக்க முடியாது

ஏனெனில், ஊவா மாகாணத்தில் கணிசமான மலையக தமிழ் மக்களும் வாழ்கின்றாகள். அவர்களை காலம் காலமாக ஐ.தே.கவுக்கு வாக்களிக்க வைத்து காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் பழக்கியிருப்பதால், அவர்கள் அந்தப் பழக்க தோசத்தில் ஐ.தே.கவுக்கே வாக்களிப்பது வழமை. அத்துடன் ஊவாவின் தலைநகரான பதுளையின் தேர்தல் தொகுதி, கொழும்பின் பொரளை தேர்தல் தொகுதி, கண்டி தொகுதி என்பன ஐ.தே.க மோசமாகத் தேர்தல் தோல்விகளைத் தழுவிய காலத்திலும் அக்கட்சிக்கு கைகொடுத்த தொகுதிகளாகும். கடந்த கால தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து பார்த்தால் இது தெரிய வரும். எனவே ஊவா முடிவுகளை வைத்து எதிர்க்கட்சிகள் 'அவலை நினைத்து உரலை இடித்தால்' ஏமாற்றமே மிஞ்சும்.

மறுபக்கத்தில், ஊவாவில் ஆளும் கட்சிக்கு கிடைத்த வெற்றியும், 'விழுந்தும் மீசையில் மண் படாத' வெற்றிதான். ஆளும் கட்சி ஊவாவில் வெற்றி பெற்றாலும், அதன் வாக்கு வீழ்ச்சி அரசின் மீது மக்களுக்கு உள்ள அதிருப்தியையும் கோடிகாட்டி நிற்கிறது. ஊவா மட்டமின்றி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சொந்த ஊரை உள்ளடக்கிய தென் மாகாணசபைத் தேர்தலிலும் முந்திய தேர்தலை விட 10 சதவிகித வாக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததைக் காண முடிந்தது. புலிகள் மீதான வெற்றி மாயைக்கு அப்பால், ஏதோ ஒரு வகையில் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு அதிருப்தி நிலவுவதையே இந்த முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்த உண்மையை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் உட்பட பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். புலிகள் மீதான யுத்த வெற்றி என்பது மட்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றிகளுக்கு தொடர்ந்தும் உதவப் போவதில்லை என்பதையே இந்த நிலைமைகள் எடுத்தியம்பி நிற்கின்றன. எனவே மக்களின் உண்மையான பிரச்சினைகள் என்ன என்பதை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதிலேயே ஆளும் கட்சியின் எதிர்கால தேர்தல் வெற்றிகள் தங்கியுள்ளன

முக்கியமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேலைத் திட்டமான 'மகிந்த சிந்தனை'யின் உள்ளடக்கம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என்பது அரசாங்கத்தில் உள்ளவர்களில் ஒரு பகுதியினரின் கருத்தாகும். அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமான அறிக்கையையும் அரசாங்கம் பூரணமாக நிறைவேற்றவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. அதுதவிர, மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது சம்பந்தமான 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தாது அரசாங்கம் இழுத்தடிக்கிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இந்த மூன்று விடயங்களும் நாட்டின் எல்லா இன மக்களையும் பொறுத்தவரை முக்கியமானவையாகும். தற்போதைய ஜனாதிபதிக்கு இன்னமும் எஞ்சி இருக்கின்ற 2 வருடங்களையும் இந்த விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்குப் பயன்படுத்திவிட்டு, ஜனாதிபதி தேர்தலுக்குப் போனால், மக்களின் ஆதரவு போதியளவு இருக்கும் என்பது, இடதுசாரிக் கட்சிகளினதும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சில பிரிவுகளினதும் கருத்தாகும்.

ஆனால் மாகாணசபைகளில் ஏற்பட்டுள்ள வாக்குச் சரிவை அடிப்படையாகக் கொண்டும், எதிர்க்கட்சிகள் தமக்குள் ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கு கால அவகாசம் கிடைக்காமல் செய்தும், ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடாத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முடிவு செய்துள்ளார் எனத் தெரிகிறது. அவர் எண்ணுவது போல ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கான வெற்றி வாய்ப்பு பிரகாசமாகக் காணப்படுவது உண்மைதான். ஆனால் அது கொள்கையின் அடிப்படையிலான அல்ல. சந்தர்ப்பம் சூழ்நிலைகளின் அடிப்படையாலனது.

இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் அரசின் மீதான பிரதான குற்றச்சாட்டுகளாக, மகிந்தவின் குடும்ப ஆட்சி, அராஜகம், ஊழல், ஊடக சுதந்திர மறுப்பு போன்ற பிரச்சினைகளே இருக்கப் போகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சி, ஜனநாயக ஆட்சி முறைமை, இனங்களின் ஐக்கியம் போன்ற விடயங்கள் பேசப்படப் போவதில்லை. அப்படிப் பேசினாலும், ஐ.தே.கவின் 1977 முதல் 1994 வரையிலான 17 வருட கொடுங்கோல் ஆட்சியை மக்கள் மறந்து அக்கட்சிக்கு வாக்களிக்கப் போவதில்லை. அதற்கும் மேலாக அக்கட்சி அமெரிக்கா தலைமையில் மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக மேற்கொண்டு வரும் செயல்களுக்கெதிராக செயல்படப் போவதில்லை என்பதும் மக்களுக்குத் தெரியும்.

ஆளும் கட்சியைப் பொறுத்தவரை, நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலிலும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விட, புலிகள் மீதான யுத்த வெற்றி, இலங்கை மீதான மேற்கு நாடுகளின் மிரட்டல், புலிகளின் மீள் எழுச்சி அபாயம், பிரிவினைவாத சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்தல் போன்ற தேசியவாதத்தை உசுப்பிவிடும் விடயங்களே ஆளும் கட்சியின் பிரதான பேசுபொருளாக இருக்கப் போகின்றன. இந்த அபாயங்கள் குறைத்து மதிப்பிடக்கூடியவை அல்ல என்பது உண்மையே. ஆனால் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமோ, அதற்கான தீர்வோ இல்லாமல் இந்த விடயங்களை மட்டுமே முன்னிறுத்தி, ஆளும் கட்சி தேர்தலை எதிர்நோக்கினால், அது மீண்டும் 'விழுந்தும் மீசையில் மண் படாத' வெற்றியாகவே இருக்கும்.

எனவே ஆளும் கட்சியோ, எதிரணியோ தாம் ஆட்சிக்கு வந்தால், என்னென்ன விடயங்களை நாட்டின் நன்மை கருதி முன்னெடுப்பார்கள் என்பதை நாட்டு மக்களின் முன்வைத்து, பரந்தளவிலான விவாதத்துக்கான சூழலை உருவாக்குவதற்கு, கல்விமானகள், அறிவுஜீவிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சமயத் தலைவர்கள், வெகுஜன அமைப்புகள் என்பன விலியுறுத்த வேண்டும். *


படிப்பகம்

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# கோழி கூரை மீதேறிக் கூவினாலும் அதன் சொந்த இடம் குப்பை மேடுதான்!

இன்றைய நாட்களில் இலங்கைத் தமிழ் ஊடகங்களில் அடிக்கடி அடிபடும் ஒரு பெயர் மனோ கணேசன் உடையதாகும். அவரது பெயர் ஊடகங்களில் அடிக்கடி இடம்பெறும் அளவுக்கு வேறொரு தமிழ் மலைவரின் பெயரும் அடிபடுவதைக் காண முடியாது. அதற்குக் காரணம் மனிசனின் சலியாத உழைப்புத்தான்.

அதாவது தினசரி வேலை மெனக்கிட்டு (தனது வியாபார முயற்சிகளுக்கிடையிலும்) இருந்து, ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றி அறிக்கை எழுதி ஊடகங்களுக்கு அனுப்பாமல் மனிசன் சாப்பிடவோ, தூங்கவோ போகமாட்டார் போல இருக்கிறது.

அவரது அறிக்கைகளில் நிச்சயமாக சிவாஜி கணேசன் 'மனோகரா' படத்தில் பேசும் ஆக்ரோசமான வசனங்களில் கிளம்பும் அனல் கட்டாயமாக இருக்கும். அத்துடன் இன்னொன்றும் இருக்கும். அதாவது வசைபாடல்.

அவரது பெரும்பாலான அறிக்கைகள் இன்றைய அரசாங்கத்தையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் வசை பாடுவதாக இருந்த போதிலும், அவற்றை 'கொமடி'யாக எடுப்பதாலோ என்னவோ, மகிந்த ராஜபக்ஸ வருடா வருடம் கணேசனுக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கத் தவறுவதில்லை. அதற்கான காரணத்துக்கு அவரது சகோதரரும், மகிந்தவின் அரசில் பிரதி அமைச்சராகவும் இருக்கும் பிரபா கணேசன் ஒரு விளக்கத்தைத் தெரிவித்திருந்தார்.

அதாவது மனோ கணேசன் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும், தமிழ் இனவாதத்தைத் தூண்டும் விதமாகவும் விடும் அறிக்கைகளை, சில சிங்களப் பத்திரிகைகள் வரிக்கு வரி மொழிபெயர்த்து தமது பத்திரிகைகளில் வெளியிடுவதால், அதை வாசிக்கும் சாதாரண சிங்கள மக்கள் மேலும் மேலும் மகிந்தவின் பக்கம் போய்ச் சேருவதற்கு மனோ கணேசன் உதவுகிறார் என்றும், அதனால்தான் அதற்கு நன்றிக் கடனாக வருடாவருடம் மகிந்த அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்கிறார் என்றும் அவர் கூறுகிறார்.

இப்படியெல்லாம் சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து தமிழ் மக்களுக்குச் சார்பாக மனோ கணேசன் ஆவேசமான அறிக்கைகளை அடிக்கடி விடுத்தாலும், அவரது உண்மையான விசுவாசமும், இருப்பிடமும் ஐ.தே.க ஆகவே இருக்கிறது. தேர்தல் வரும் சமயங்களில் இதைக் காணலாம். அண்மையில் நடைபெற்ற ஊவா மாகாணசபைத் தேர்தலிலும் ஐ.தே.க மேடைகளில் எவ்விதக் கூச்சநாச்சமும் இன்றி ஏறி நின்று கூவி இருக்கிறார்.

தயக்கமின்றி அவர் மேற்கொள்ளும் இந்த இரட்டை வேடத்துக்குக் காரணம், மக்கள் மறதிக் குணம் உள்ளவர்கள், மடையர்கள் என்று கருதுவதுதான்.

ஏனெனில், மனோ கணேசன் கொழும்பில் ஒரு வியாபாரியாக வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்தாலும், அவரும் ஒரு இந்திய வம்சாவழித் தமிழர்தான். இந்திய சம்சாவழித் தமிழ் மக்களின் வாக்குரிமையையும், பிரஜா உரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது, அவர் வழிபடும் ஐ.தே.க தான் என்பதை அவர் அறியாமல் இருக்க முடியாது.

அதேபோல, தமிழ் மக்களின் மீது காலத்துக்காலம் இனவன்செயல்களை சிங்களக் காடையர்கள் நடாத்தி வந்ததிற்கு அவர்களைத் தூண்டிவிட்டதும், ஐ.தே.க ஆட்சிக் காலங்களில்தான் என்பதும் அவருக்குத் தெரியாததல்ல.



இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தம், சந்திரிகாவின் 2000 ஆண்டுத் தீர்வுத் திட்டம் என்பன போன்ற பெறுமதி வாய்ந்த அதிகாரப் பகிர்வு தீர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவிடாமல் குழப்பியதும், மனோ கணேசன் வால் பிடிக்கும் ஐ.தே.க தான். இப்படி எத்தனையோ சொல்லிக்கொண்டு போகலாம்.

இருந்தும் பிடிவாதமாகவும், தொடர்ச்சியாகவும் மனோ கணேசன், இலங்கையில் இருக்கின்ற கட்சிகளில் மிக மோசமான சிங்களப் பேரினவாதக் கட்சியான ஐ.தே.க. மீதே தனது விசுவாசத்தைக் காட்டி வருகிறார்.

இவ்வளவு எல்லாம் செய்த ஐ.தே.க தமிழர்களுக்கும், அவர்களில் ஒரு பகுதியினரான மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நன்மை செய்யும் என்றும் மனோ கணேசன் கூறுகிறாரென்றால், ஒரு பக்கத்தில் மக்களுக்கு அஞ்சாத அவரது துணிச்சலையும், மறுபக்கத்தில் அவரை நம்பி ஆதரிக்கிற தமிழர்களில் ஒரு பகுதியினரின் முட்டாள் தனத்தையும்தான், அது பறைசாற்றி நிற்கிறது. *


படிப்பகம்